செ. கு. எண்: 003 நாள் : 03.01.2014

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 3.1.2014

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரபட்டிணம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. S.ஜான்சன் ஆல்வின் டேவிட் அவர்கள் 6.12.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் ஆறுமுகநேரி அருகே சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்ட சிறப்பு காவல் படை 8-ம் அணியில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. தினேஷ்குமார் அவர்கள் 1.8.2013 அன்று நல்லுத்தேவன்பட்டி அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 8.12.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.பச்சையப்பன் அவர்கள் 8.12.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், பாய்ச்சல் காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.துரைசாமி அவர்கள் 10.12.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்ட "க்யு" பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. T.மகேந்திரன் அவர்கள் 10.12.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், மொளசி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.பழனிசாமி அவர்கள் 13.12.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

ஈரோடு நகரம் தெற்கு காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு C. சக்திநாதன் அவர்கள் 11.12.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், மாம்பலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு C. முருகன் அவர்கள் 12.12.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பச்சையப்பன், துரைசாமி, பழனிசாமி, முருகன்; தலைமை காவலர்கள் மகேந்திரன்; முதல்நிலைக் காவலர்கள் ஜான்சன் ஆல்வின் டேவிட், சக்திநாதன்; காவலர் தினேஷ்குமார் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**